**செ. கு. எண்: 115** **நாள்: 06.07.2020**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்

இரங்கல் செய்தி – 6.7.2020

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் மகனும், முதுபெரும் தமிழறிஞருமான திரு. மன்னர் மன்னன் அவர்கள் இன்று ( 6.7.2020 ) உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த மன வேதனைஅடைந்தேன்.

திரு. மன்னர் மன்னன் அவர்கள் தமிழக அரசின் திரு.வி.க. விருது, கலைமாமணி விருது, புதுச்சேரி அரசின் தமிழ்மாமணி விருது உள்ளிட்ட பல விருதுகளை பெற்றுள்ளார். இவர் இந்திய விடுதலைப் போராட்டத்திலும், மொழிப்போர் போராட்டத்திலும் ஈடுபட்ட தியாகியாவார். திரு மன்னர் மன்னன் அவர்கள், கர்மவீரர் காமராஜர், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் மற்றும் மாண்புமிகு அம்மா ஆகியவர்களுடன் நெருங்கிப் பழகி, அவர்களின் அன்பைப் பெற்றவர் ஆவார். 50க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதி சிறந்த எழுத்தாளராகவும், சிறந்த பேச்சாளராகவும் திகழ்ந்தவர்.

பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளை தமிழ்க் கவிஞர் நாளாக ஆண்டுதோறும் கொண்டாட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அறிவித்த போது, அதற்கு நன்றி தெரிவித்தும், திருவள்ளூரில் நடைபெற்ற முதல் தமிழ்க் கவிஞர் நாள் விழாவில் தமது அகவை முதிர்வையும், உடல் நலிவையும் பொருட்படுத்தாமல் பங்கேற்று சிறப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. மன்னர் மன்னன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், தமிழறிஞர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**